செ. கு. எண்: 192 நாள் : 16.12.2015

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 16.12.2015

தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழை மற்றும் தென்மேற்கு வங்கக் கடலில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக பெய்த கன மழையினால் 1.12.2015 அன்று திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டம், காட்டுப்பாக்கத்தைச் சேர்ந்த திரு. நடராஜன் என்பவரின் மகன் பரமசிவம்;

2.12.2015 அன்று சென்னை, எழும்பூர் வட்டம், ஆயிரம் விளக்குப் பகுதியைச் சேர்ந்த ஜெயராஜ்;

4.12.2015 அன்று திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், விச்சூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. முனியாண்டி என்பவரின் மகன் பிரதாப்;

5.12.2015 அன்று பொன்னேரி வட்டம், காட்டூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. முரளி என்பவரின் மகன் அஜீத்குமார்; திரு. குமார் என்பவரின் மகன் சுந்தரமூர்த்தி;

12.12.2015 அன்று காட்பாடி வட்டம், விழுந்தாங்கால் கிராமத்தைச் சேர்ந்த திரு. கேசவன் என்பவரின் மகன் வசந்த்;

13.12.2015 அன்று திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், தண்டையார்குளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஞானதிரவியராஜ் என்பவரின் மகள் மரியகபிலா;

——ஆகியோர் சமீபத்தில் பெய்த கன மழையின் காரணமாக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

2.12.2015 அன்று திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், விச்சூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ராகவன் என்பவரின் மகன் சீனிவாசன்;

6.12.2015 அன்று திருவள்ளூர் மாவட்டம், மோவூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. நடராஜ் என்பவரின் மகன் மகாலிங்கம்;

-- ஆகியோர் கன மழையின் காரணமாக, வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

4.12.2015 அன்று திருவள்ளூர் மாவட்டம், மதுரவாயல் கிராமம், ஆலப்பாக்கம் பகுதியைச் சேர்ந்த திரு. ஐயப்பன் என்பவரின் மகன் பரமசிவம் மழையின் காரணமாக மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

தமிழ்நாட்டில் சமீபத்தில் பெய்த கன மழையின் காரணமாக பல்வேறு நிகழ்வுகளில் மேற்கண்ட தேதிகளில் உயிரிழந்த இந்த 10 நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா நான்கு லட்சம் ரூபாய் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9**